பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 20 | புதன்கிழமை | 03.07.2024 | அதிர்வு 337

## பெருந்தலைவர் சம்பந்தனுக்கு பெருந்திரளானோர் அஞ்சலி!



காலஞ்சென்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம் பந்தனின் புகழுடல் மக்களின்

04



# சம்பந்தனின் புகழுடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவருமான இரா.சம்பந் தனின் புகழுடலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதி அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரின் புகழுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருக் கும் கொழும்பு – பொரளை ஏ.எவ்.றேமண்ட்ஸ்

07

## தமிழ்த் தேசிய இனத்தின்

# தானைத் தளபதியை இழந்து நிற்கின்றோம்

## சம்பந்தனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் ஹக்கீம் தெரிவிப்பு





“தமிழ்த் தேசிய இனத்தின் தானைத் தளபதியை இன்று நாங் கள் இழந்து நிற்கின்றோம். தமிழ் பேசும் மக்களுக்கு நல்லதொரு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே அண்ணன் சம்பந்தனின் இறுதி விருப்பாக இருந்தது.

04

# நயினாதீவுக்குப் பொருள்கள் ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் ஒருவர் பரிதாப மரணம்!

## மூவர் உயிருடன் மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், குறிகட்டுவா னில் இருந்து நயினாதீவுக்குப் பொருள்கள் ஏற்றிச் சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் ஒருவர் கடலில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந் தார். அத்துடன் மூவர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

குறிகட்டுவானுக்கும்

04



சம்பந்தனின் மறை வின்பின்னணியில், இது வரை காலமும் அவர் விடாது முயன்ற தீர்வுக் கான சில எத்தனங்க ளையாவது, அவருக் கான நன்றிக் கடனாக இச்சமயத்தில் முன்னெ டுக்கும் முஸ்தீபு அரசுத் தலைமையிடம் வந்திருப்பதாகத் தெரி கின்றது.

ஆயினும், விடயம் செயலுருப் பெற்று, காரிய சித்தியாகும் வரை நம்ப முடியாது. சிங்களத் தலைமைகள் அப்படிப்பட்டவை என்ற பட்டறிவு கடந்த 75 ஆண்டுகளாக நமக்கு உண்டு.

06

# சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு குகதாசன் நியமனம்



வெற்றிடமாகியுள்ள திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற ஆசனத்திற்காக இலங்கை தமிழரசுக் கட்சியின் சண்முகம் குகதாசனின் பெயரை வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. அந்த வர்த்தமானி நேற்று வெளியானது.

திருகோணமலை திரியாய் பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் குகதாசன் அரச அறிவியல் துறையில் முதுநிலை பட்டதாரியாவார்.

நீண்ட காலமாக கனடாவில் வசித்து வந்த சண்முகம் குகதாசன், 2020 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட கிளைத்தலைவராக இரண்டு சந்தர்ப்பங்களில் கடமையாற்றியுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில் சண்முகம் குகதாசன் போட்டியிட்டிருந்தார்.

அந்த தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் காலஞ்சென்ற இராஜதவரோதயம் சம்பந்தனுக்கு பின்னர் அதிகூடிய வாக்குகளை அவர் பெற்றிருந்தார்.

பொதுத் தேர்தலில் அவர் 16 ஆயிரத்து 770 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடன் நிலைபேற்றுத்தன்மைக்கான நிச்சயமற்ற நிலை முடிந்துவிட்டது

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



"இலங்கையில் கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதில் இருந்த அனைத்து நிச்சயமற்ற தன்மைகளும் தற்போது முடிவுக்கு வந்துவிட்டன. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் இருக்கின்றது."

– இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான கடன் மறுசீரமைப்பு தொடர்பான நற்செய்தி தற்போது கிடைத்துள்ளது. கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களாக இருதரப்பு கடன் வழங்குநர் குழு மற்றும் பரிஸ் கழகத்தின் நாடுகளுடன் உடன்பாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், அதே தினம் சீனா எக்சிம் வங்கியுடன் உடன்பாடு எட்டப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு, கடன் மறுசீரமைப்பு தொடர்பான இரண்டு அத்தியாவசிய விடயங்களை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம். மேலும், இலங்கையில் இந்தக் கடனை மறுசீரமைப்பது குறித்து சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் உள்ளது. ஆனால் இந்த நாட்டில் உள்ள சில தரப்பினர் அரசியல் நோக்கங்களுக்காக கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நற்செய்தியாகப் பார்க்க மறுக்கின்றன.

இது, ஒரு நாடு என்ற வகையில் மிகவும் வருந்தத்தக்க விடயம் என்பதைக் கூற வேண்டும். இது தொடர்பான புரிதல் இல்லாத காரணத்தால் தான் நாம் செய்த பணிகள் குறித்து சில தரப்பினர் இவ்வாறு கூறுகிறார்கள் என்றுதான் முதலில் நினைத்தோம். ஆனால், அந்த கருத்துகள் குறுகிய அரசியல் நோக்கங்களால் கூறப்பட்டவை என்பது இப்போது தெளிவாகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (நேற்று) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, அப்போது எதிர்க்கட்சிகள் நடந்துகொண்ட விதத்தின் மூலம் அது தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. எனவே அரசியலையும் பொருளாதாரத்தையும் கலந்து நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைப்பவர்களின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்பது குறித்து மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். கானா, ஈக்வடார், ஆர்ஜென்டினா போன்ற நாடுகளின் நிலைமை குறித்து சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

ஆனால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கும் நடுத்தர வருமான நாடுகளுக்கும் இடையிலான கடன் மறுசீரமைப்பில் உள்ள வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நடுத்தர வருமானம் கொண்ட நாடான நம் நாட்டில் கடன் மறுசீரமைப்பு என்பது குறைந்த வருமானம் கொண்ட நாட்டின் கடன் மறுசீரமைப்பை விட சிக்கலானது.

ஆனால் நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த கடன் மறுசீரமைப்பில் இலங்கை முன்னணியில் உள்ளது. மேலும், கடன் மறுசீரமைப்பின் 03 முக்கிய விடயங்களை செயற்பாட்டின் ஊடாக நிரூபிக்க நாம் தயாராக உள்ளோம். அதன்படி, எங்களின் கடன் வழங்குநர்கள் கடனை செலுத்த 2024 முதல் 2027 வரை அவகாசம் அளித்துள்ளனர். அந்தக் காலப்பகுதியில் எமக்குக் கிடைக்கும் சுமார் 05 பில்லியன் டொலர்களின் நன்மையை, நாட்டு மக்களின் நலனுக்காக பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2032ஆம் ஆண்டுக்குள், அரச கடன் தொகை மொத்தத் தேசிய உற்பத்தியில் 95 வீதம் வரை குறைக்கப்பட வேண்டும். 2027 மற்றும் 2032 காலக்கட்டத்தில் மொத்த நிதித் தேவை 13 வீதம் வரைக் குறைக்கப்பட வேண்டும். 2027-2032 காலகட்டத்தில் வெளிநாட்டுக் கடன் சேவையும் 4.5 வீதம் வரைக் குறைக்கப்பட வேண்டும்.

இந்த 03 இலக்குகளை நிறைவு செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட கடன் மறுசீரமைப்புக்கு நாம் இப்போது உடன்பட்டுள்ளோம். அதன்படி, இந்த நாட்டிற்கான கடன் நிலைபேற்றுத்தன்மையை அடைவதற்காக நிலவிய அனைத்து நிச்சயமற்ற தன்மையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. இந்தப் பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் இலங்கையில் பணவீக்கம் 70 வீதத்திலிருந்து 1.7 வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. நாட்டின் திறைசேரி உண்டியல் ஏலத்தில், ஓராண்டு திறைசேரி உண்டியல்களின் வட்டி விகிதம் 10 வீதத்தை எட்டியுள்ளது."

– என்றார்.

# வவுனியாவில் அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பெற்றோரும் ஆர்ப்பாட்டம்

(கே.வசந்தன்)

தமது கோரிக்கைகளுக்கு விரைவில் பதில் வழங்குமாறு கோரி வவுனியா மாவட்டத்தில் பல பாடசாலைகளிலும் பாடசாலை நேரத்தின் பின்னர் நேற்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் பாடசாலைகளுக்கு முன்பாக பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, விபுலானந்தா கல்லூரி, புதுக்குளம் மகா வித்தியாலயம் என்பவற்றுக்கு முன்னால் பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்வைத்துள்ளனர்.

மேலும், அண்மையில் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சங்கத்தினரால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டம் மீது கண்ணீர்ப் புகை பிரயோகம் மற்றும் நீர்த் தாரைப் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டமையை ஆர்ப்பாட்டகாரார்கள் கண்டித்துள்ளனர்.














# தானைத் தளபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த நிரந்தர தீர்வின் ஊடாக இந்தத் தேசம் வளம்பெற வேண்டும், இந்தத் தேசத்திலே தேசிய இணக்கப்பாடு வளர வேண்டும் என்கின்ற அவருடைய வேணவா நிறைவேற நாங்கள் எல்லோரும் பிரார்த்திப்பவர்களாக இருப்பதே நாங்கள் அவருக்குச் செலுத்துகின்ற மாபெரும் அஞ்சலியாகும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மறைந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தனின் புகழுடலுக்கு நேற்று இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவூப் ஹக்கீம் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

# நயினாதீவுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நயினாதீவுக்கும் இடையில் பொருள்கள் ஏற்றி இறக்கலில் ஈடுபட்ட படகு ஒன்று நான்கு தொழிலாளர்களுடன் நேற்று நடுக்கடலில் கவிழ்ந்தது. இதனால் படகில் பயணித்த நால்வரும் கடலில் வீழ்ந்தனர்.

அவர்கள் கரை நோக்கி நீந்திய வேளை, கிராம மக்களின் உதவியுடன் மூவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் புங்குடுதீவு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது .

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெருந்தலைவர் சம்பந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலிக்காக நேற்றுக் காலை 9 மணி முதல் கொழும்பு – பொரளையிலுள்ள ஏ.எவ்.றேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் புகழுடலுக்கு அரசியல் பிரமுகர்கள், கட்சி உறுப்பினர்கள், வெளிநாடுகளின் தூதுவர்கள், பொது மக்கள் எனப் பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அன்னாரின் புகழுடல் இன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் திருகோணமலையிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் அன்னாரின் புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் முன்னெடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

உடல் நலக்குறைவால் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே 91 ஆவது வயதில் அவர் இயற்கை எய்தினார்.



# சர்வதேச ரீதியில் பெரும் துயரத்தை தந்தது சம்பந்தன் ஐயாவின் மறைவு

## நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் இரங்கல்



சிறுபான்மைச் சமூகம், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் வேண்டி நிற்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க தனது வாழ்நாளை அர்ப்பணித்த தலைவர்கள் வரிசையில் தனியிடம் வகித்த இரா. சம்பந்தன் ஐயாவின் மறைவு சர்வதேச ரீதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசால் காசிம் தனது இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் வேரூன்றியுள்ள இனப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தனது வாழ்நாள் பூராகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கிவந்த மூத்த தலைவர் ஒருவரை இழந்திருப்பதானது சர்வதேச ரீதியில் பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள பல்வேறு சவால்களுக்கு மத்தியில், இனப் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனும் முனைப்புடன் செயற்பட்டுவந்த ஒருவரை இழந்திருப்பது பாரிய திருப்புமுனையாக எதிர்காலத்தில் மாற வாய்ப்புள்ளதாகவே பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கான உரிமைகளை பெற்றுக் கொடுக்க முனையும் தலைமைகளுக்கு சம்பந்தன் ஐயாவின் இடைவிடாத செயற்பாடுகள் என்றும் முன்னுதாரணமானவை என்பதுவே நிதர்சனம்.

தனது 91 ஆவது வயதில் பல்வேறு வரலாற்றுப் பாடங்களை நம் மத்தியில் விட்டுச் சென்றுள்ள மூத்த அரசியல் ஆளுமை, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன் ஐயாவின் பிரிவுத் துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும், திருகோணமலை மக்களுக்கும், தமிழரசுக் கட்சிக்கும் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.-என்றார்.

# புத்தளத்தில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்!









**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் – உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூனைப்பிட்டி கடற்கரையோரத்தில் பெண் ஒருவரின் சடலம் நேற்றுப் பகல் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் கரையொதுங்கிய பகுதியில் ஆடு மேய்க்கச் சென்ற நபர் ஒருவர் கடற்கரையோரத்தில் இவ்வாறு சடலமொன்று கிடப்பதை அவதானித்தார். அவர் உடனடியாகப் பிரதேச மக்களுடன் இணைந்து அந்தப் பகுதிக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் ஊடாகப் பொலிஸாருக்குத் தகவலை வழங்கினார்.

சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த உடப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சடலமாகக் கரையொதுங்கிய பெண் 40 வயது முதல் 50 வயதுக்கு இடைப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணின் சடலம் உருக்குலையாத நிலையில் ஆடை எதுவுமின்றி காணப்படுகின்றது என்றும் பொலிஸார் கூறினர்.

மேலும், சிறுநீரகப் பட்டை பொருத்தப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணின் சடலம் கரையொதுங்கியுள்ளது. மேற்படி பெண் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நோயாளியாக இருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் ஏ.எம்.வசீம் ராஜா, சடலத்தைப் பார்வையிட்டதுடன் விசாரணையை மேற்கொண்டார். பின்னர் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கரையொதுங்கிய பெண்ணின் சடலம் யாருடையது என்பது தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த முன் முயற்சிகள் பற்றிய விடயங்களை மேலோட்டமாக இன்றைய 'காலை முரசு' அதன் ஆசிரியர் தலையங்கத்தில் விவரித்து இருக்கின்றது. வாசகர்கள் வாசித்து அறியலாம். அவற்றை மீண்டும் திரும்ப இங்கு விவரிக்காமல் தவிர்க்கிறேன்.

அதை ஒட்டிய தொடர் நடவடிக்கைகள் நேற்றைய சம்பந்தன் ஐயாவின் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்ற கொழும்பு பொரளை ஏ.எவ். றேமண்ட்ஸ் மலர் சாலையிலும் இடம் பெற்றன.

சம்பந்தனுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் உட்பட மேற்குலகத் தூதர்கள், சில ராஜதந்திரிகள் அங்கு சுமந்திரன் – சாணக்கியன் இணையுடன் மேலோட்டமாக இந்த விடயங்கள் குறித்துப் பேசி இருக்கின்றனர் என்று அறிய வந்தது.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வந்து நிறைவேற்றுதல், 13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் என்பவற்றைத் தமது அடுத்த மூன்று மாத பதவிக்காலத்துக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுலபமாக நிறைவேற்ற முடியும், அதை சம்பந்தனுக்கான நன்றிக் கடன் என்ற பெயரில் முன்னெடுக்கலாம், அதற்கான உகந்த சூழ்நிலை உள்ளது என்பதை சுமந்திரன் அஞ்சலி நடைபெற்ற மலர் சாலையில் தூதர்களுடன் தனித்தனியாகப் பேசிய போது சுட்டிக்காட்டினார்.

13 ஆம் திருத்த நடைமுறையாக்கத்துக்குத் தாங்களும் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸாவும், தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸநாயக்கவும் கூறியிருக்கின்றமையால், இந்த நகர்வு இப்போது முன்னெடுக்கப்பட்டால், அவர்களின் தரப்புக்களும் இதைப் பகிரங்கமாக எதிர்க்க முடியாது, ஆதரித்துத்தானாக வேண்டும், ஆகவே



ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இந்த விடயத்தை இப்போது – இந்தச் சமயத்தில் – ஒப்பேற்றுவதுதான் மிகவும் கனகச்சிதமானது என்று சுமந்திரன் சுட்டிக்காட்டியமையை, அமெரிக்கத் தூதரும், ஏனைய தூதர்களும், ராஜதந்திரிகளும் தனித்தனியாக ஒப்புக் கொண்டிருக்கின்றனர்.

ஆகையினால் இது தொடர்பான ஆதரவும், அழுத்தமும் மேற்கு நாடுகளில் இருந்தும் அரசுத் தரப்புக்கு செல்லக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

இதேசமயம், நேற்று அஞ்சலி நிகழ்வுகளுக்கு இடையில் சுமந்திரன் – சாணக்கியன் இணையுடன் பேசிய அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் அம்மையார் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சியில் தமிழர் தரப்பில் இன்னும் ஆதரவுத்தளம் உண்டா என்ற சாரப்பட வினவி இருக்கின்றார்.

இந்தத் திட்டம் குறித்து சம்பந்தனின் கருத்து நிலைப்பாடு இதுதான் என்பதை சம்பந்தனின் சொல்லாடல்களிலேயே தூதருக்கு விளங்கப்படுத்தினார் சுமந்திரன்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது முட்டாள்தனமான எண்ணம் (Silly thinking), பைத்தியக்காரத்தனமான யோசனை (Crazy idea) என்பது தான் சம்பந்தன் ஐயாவின் கருத்து என்று விளக்கினார் அவர்.

சம்பந்தன் ஐயாவின் நினைவஞ்சலி நிகழ்வையொட்டி இப்படிப் பக்கவாட்டில், அவர் சிந்தித்த வழியில் சில அரசியல் நகர்வுகள் நடைபெற்றன என்றால், மறுபக்கத்தில் நமது அரசியல் பிரகிருதிகள் சிலர் தங்கள் அரசியலையும் பார்த்துக் கொண்டனர். சம்பந்தன் ஐயாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு ஜனாதிபதி முதற்கொண்டு முக்கிய பிரமுகர்கள் வந்த போது, இடையில் ஓடி ஓடித் தங்கள் தலையையும் பிரமுகர்களுக்கு இடையில் நீட்டிப் படத்துக்குப் போஸ் கொடுப்பதில் மும்முரமாக இருந்ததுதான் அவர்களின் அரசியல் நகர்வு.

சம்பந்தன் ஐயாவின் இறப்பு வீட்டைத் தங்கள் வீட்டுச் செத்த வீடு போல மாற்றி, 'சீப் பப்ளிசிட்டி' தேடும் இந்தப் போக்கை அங்கு வந்திருந்த பலரும் முகத்தைச் சுளித்துக் கொண்டு நோக்கியமையையும் அவதானிக்க முடிந்தது. அந்தப் பிரகிருதிகள் யார் என்பதை நான் கூறப்போவதில்லை. வாசகர்களே படங்களைப் பார்த்து அறிந்து கொள்வர்.

இன்று நாடாளுமன்றத்தில் சம்பந்தனின் பூதவுடல் அஞ்சலிக்கு



எடுத்து வரும் நிகழ்வில் சபாநாயகர், பிரதமர் மற்றும் அமைச்சர்கள், எம்.பிக்கள் கலந்து கொள்வர். ஜனாதிபதி பங்குபற்றமாட்டார் என்று தெரிகிறது.

திருகோணமலையில் ஞாயிறன்று நடைபெறும் இறுதிக் கிரியை நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், தமிழ் முற்போக்கு முன்னணித் தலைவர் மனோ கணேசன் எல்லோரும் பங்குபற்றுவர் என்றும் கூறப்பட்டது.

\+ \+ \+

நமது அரசியல் தலைவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார்கள், இங்குதான் வாழ்கின்றார்களா என்ற சந்தேகம் எனக்குச் சில சமயங்களில் வருவதுண்டு.

ஏனெனில் அவர்களின் நடத்தைகள், கருத்து வெளிப்பாடுகள் அந்த விதமாகத்தான் பல சமயங்களில் இருக்கும். என்ன பேசுகின்றோம், ஏது பேசுகின்றோம் என்று யோசியாமல் முட்டாள்தனமாகக் கருத்து வெளியிடுவார்கள்.

நேற்று எமது யாழ்ப்பாணச் செய்தியாளர் அனுப்பி வைத்த ஒரு செய்தியை வாசித்த போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இலங்கையில்தான் வசிக்கின்றாரா, இலங்கைச் சட்டங்கள் தெரிந்துதான் பேசுகின்றாரா, ஒரு முக்கிய அரசியல் கட்சியின் தலைவர் என்ற தகுதி நிலையில் இருந்துதான் அவர் கருத்துரைகின்றாரா என்ற சந்தேகங்கள் எல்லாம் எனக்கு வந்துவிட்டன.

அப்படி அந்தச் செய்தியில் என்ன இருந்தது? வாசகர்களின் புரிதலுக்காக அந்தச் செய்தியை அப்படியே முதலில் தருகிறேன்:–

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் இடத்திற்கு குகதாசனை நியமிக்க போவதாக கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலுகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை தாம் நடத்திய ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழர்களின் தலைநகரமான திருகோணமலையில் எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்படுகின்றமையுடன் நில அபகரிப்பு உள்ளிட்ட தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலைமையில் அங்கு பதவியில் இருந்த எமது கட்சியின் பெருந் தலைவர் உயிரிழந்து இருக்கின்றமையால் அந்த மாவட்டத்திற்குச் சரியான ஒருவரை நியமிக்க வேண்டும்.

இதற்கமைய சம்பந்தனுக்கு அடுத்ததாக வாக்குப் பெற்றுள்ளவரும் அந்த மாவட்டத்திற்கு மிகவும் பொரூத்தமானவருமாக இருக்கிற குகதாசனை நியமிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

ஆகையினால் சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் முடிந்த பின்னர் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டி அதன் பின்னராக யாரை நியமிப்பதென்ற தீர்மானத்தை எடுக்க உள்ளோம். – என்றார்.

– இதுதான் அந்தச் செய்தி.

இனி விடயத்துக்கு வருவோம்.

1. மாவட்ட ரீதியில் தெரிவான ஓர் எம்.பி. இறந்தால் அல்லது பதவியை விட்டு விலகினால் விருப்பு வாக்கு வரிசையில் அடுத்த நிலையில் இருப்பவரை எம்.பியாக தேர்தல் ஆணையம் அறிவிக்கும். இதில் கட்சி முடிவெடுக்கவோ, பரிசீலிக்கவோ,தலையிடவோ, ஆலோசிக்கவோ இடம் ஏதும் இல்லை. இது தெளிவான சட்ட ஏற்பாடு.

2. அதன்படி சம்பந்தனின் இடத்திற்கு விருப்பு வாக்கு வரிசையில் அடுத்த நிலையில் உள்ள குகதாசனின் பெயர் நேற்றுப் பகலே வர்த்தமானி அறிவித்தலில் வெளியாகிவிட்டது. அவர் வரும் ஒன்பதாம் திகதிய நாடாளுமன்ற அமர்வில் இனி பதவியேற்பதுதான் மிச்சம்.

3. அதற்கிடையில் கட்சியின் மத்திய குழு கூடி அடுத்த எம்.பியாக யாரை நியமிப்பது என்று பரிசீலிக்கும் எனப் பிதற்றுகின்றார் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா.

வயது போனால் இப்படித்தான் போலும்...!

# சம்பந்தனின் புகழுடலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மலர்ச்சா லைக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற ஜனாதிபதி ணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதியின் துணைவியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் புகழுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதலும் தெரிவித்தனர்.





















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் ஒளிக்கீற்று!

‘Blessing in disguise’ என்று ஆங்கிலத்தில் ஒரு சொல்லடை உண்டு. இழப்பிலும் ஆசீர்வாதம் என்று அதைக் கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய இனம் கடந்த ஒன்றரை தசாப்தங்களாக அதற்கு மிதவாத தலைமைத்துவத்தை வழங்கிய ஒருவரை இழந்து நிற்கும் இச்சமயத்தில், அந்த இழப்பிலும் ஒர் ஆசீர்வாதம் கிட்டும் வாய்ப்பு - சந்தர்ப்பம் - வந்திருப்பதாகத் தோன்றுகின்றது.

“அதிகாரப் பகிர்வு தொடர்பில் தலைவர் சம்பந்தன் தனித்துவமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அதனை நிறைவு செய்வதே நாம் அவருக்கு ஆற்றக்கூடிய பங்கு” - என்று நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இதற்கு நேற்று நாடாளுமன்றத்திலேயே உடனடியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியான சுமந்திரன் சுருக்கமான பதில் ஒன்றை அளித்திருந்தார்.

“சம்பந்தனின் ஆயுள் காலத்தில் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி திரும்பத் திரும்பக் கூறி வந்தார். துரதிஷ்டவசமாக சம்பந்தன் எம்மைப் பிரிந்து விட்டார்.

எனவே ஜனாதிபதியின் இந்தப் பதவிக் காலம் இந்த ஒக்டோபரில் முடிவடைவதற்கு முன்னராவது இந்த விடயம் இந்த நாட்டில் வதியும் அனைத்து மக்களின் திருப்திக்கும் அமைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடமும் அரசிடமும் கோரிக்கையாக விடுகிறேன்.” - என்று சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார். சுமந்திரன் இந்தப் பதிலை அளித்த சமயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற அவையில் இருக்கவில்லை. அவர் நாடாளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்தில் இருந்தார். அங்கிருந்த படி நாடாளுமன்ற அமர்வுகளை அவர் தொலைக்காட்சியில் அவதானித்துக் கொண்டிருக்கக் கூடும்.

சுமந்திரனின் உரை முடிந்த பின்னர், அவரையும் தமிழரசுக் கட்சியின் மற்றொரு எம்.பியான சாணக்கியனையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்தில் சந்தித்து விரிவாகப் பேசியிருக்கிறார்.

சம்பந்தனின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் விதத்தில் பூர்வீகப் பணிகளையாவது இப்போது - இந்தப் பதவிக் காலத்தில் ஆரம்பித்து முன்னெடுங்கள் என்று சுமந்திரன் - சாணக்கியன் இணை முன்வைத்த யோசனையை - பரிந்துரையை - சாதகமாகப் பரிசீலிக்கவும், நடவடிக்கை எடுக்கவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது பச்சைக் கொடி காட்டினார் என்று தெரிகின்றது.

முதல் கட்டமாக மாகாண சபையை மீண்டும் இயன்றவிரைவில் இயங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யும்படியும், அதற்கான ஆயத்தப் பணிகளை உடன் விரைந்து ஆரம்பிக்கும்படியும், ஜனாதிபதியின் தற்போதைய பதவிக் காலத்திலேயே காத்திரமான விடயங்களை ஒப்பேற்றி, செயலில் காட்டும்படியும் சுமந்திரன் விடுத்த வலியுறுத்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையாக ஏற்றுக் கொண்டார் எனவும் தெரிகிறது.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வருவது தொடர்பான தனது தனிநபர் சட்டமூலப் பிரேரணை குறித்து உயர் நீதிமன்றம் விசாரணை நடத்தித் தீர்மானித்து விட்டது என்பதைச் சுட்டி காட்டிய சுமந்திரன், அதனை சாதாரண பெரும்பான்மை மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் அது உடனடியாக நடைமுறைக்கு வரும் என்றும் விளக்கினார்.

குறைந்தபட்சம் ஒகஸ்ட் மாதத்திலாவது இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றினால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபை தேர்தல் நடக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு வரும், தீர்வை நோக்கிய நகர்விலும் மக்களின் ஈடுபாடும் பங்களிப்பும் கிட்டும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் செய்யப்பட வேண்டிய விடயங்களின் ஒழுங்கு, மாகாண சபை தேர்தல் தொடர்பாக சுமந்திரன் சமர்ப்பித்த தனிநபர் சட்டம் மூலம், அது தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பு ஆகியவற்றுடன் இன்று தம்மைச் சந்திக்கும்படி சுமந்திரனைக் கேட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது.

அதிகாரப் பகிர்வுத் திசையை நோக்கிய பயணத்துக்கு மீண்டும் ஒரு சிறு ஒளிக்கீற்று தென்படுவதாக இதனைக் கருத முடியும்.



# உத்தரப் பிரதேச ஆன்மிக நிகழ்வின் கூட்ட நெரிசலில் சிக்கி 116 பேர் பலி

உத்தரப் பிரதேசத்தின் ஹாத்தரஸ் மாவட்டத்தில் நடைபெற்ற பிரார்த்தனை கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக 116 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தின் ஹாத்தரஸ் மாவட்டத்தின் சிக்கந்தராரா-வில் நாராயண் சாகர் விஷ்வ ஹறி போலே பாபா என்பவரின் பிரார்த்தனை கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் பக்தர்கள் வெளியேறும்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 116 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது தெரிய வந்துள்ளது.

சிக்கந்தராராவின் முகல்கடி எனும் கிராமம், தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் உள்ளது. இங்கு நாராயண் சாகர் விஷ்வ ஹறி போலே பாபா எனும் துறவியின் மடம் அமைந்துள்ளது. இதில் நேற்று அனைத்து மதத்தினரின் மனிதநேய மங்கள சந்திப்பு எனும் பெயரில் பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது.

இதில், ஹாத்தரஸை சுற்றியுள்ள மாவட்டங்களின் கிராமவாசிகள் ஆயிரக்கணக்கில் வந்து கலந்து கொண்டனர். இந்தக் கூட்டம் முடிந்து பக்தர்கள் வெளியேறியபோது நெரிசல் ஏற்பட்டது. தள்ளு முள்ளு காரணமாக ஒருவர் மீது ஒருவர் விழத் துவங்கியுள்ளனர். இதனால், கூச்சல் குழப்பம் ஏற்பட்டு வெளியேறும் வழி தெரியாமல் பலரும் மயங்கி விழுந்துள்ளனர்.

மயங்கிய பலர் அதே இடத்தில் மூச்சுத் திணறி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இவர்களில் 27 பேரின் உடல்கள் அருகிலுள்ள ஏட்டா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்த நெரிசலில் படுகாயம் அடைந்த பலரும் அருகிலுள்ள ஹாத்தரஸ், அலிகர் மற்றும் ஏட்டா அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த அரசு மருத்துவமனைகளின் பிணவறைகள் நிறைந்து கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் பலர் ஆங்காங்கே உள்ள தனியார் மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களிலும் பலர் உயிரிழந்தனர். இது குறித்து ஆக்ரா மண்டல பொலிஸ் ஏ.டி.ஜியின் மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் பலியானவர்கள் எண்ணிக்கை 116 என உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் சுமார் 1.25 லட்சம் பேர் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலியானவர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் தெரியவில்லை. ஹாத்தரஸ் நிர்வாகம் மற்றும் பொலிஸாருடன் அருகிலுள்ள ஏட்டா மாவட்டத்தின் பொலிஸ் கண்காணிப்பாளர் ராஜேஷ் குமார்சிங் மற்றும் ஏட்டா மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரியான உமேஷ் சந்திர திரிபாதி ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

சம்பவ இடம் போர்க்களம் போல் எங்கு பார்த்தாலும் பலியானவர்கள் உடல்களும், காயப்பட்டவர்களும் மயங்கி கிடந்தனர். இவர்கள் உள்ளூர் கிராமவாசிகள் உதவியுடன் கிடைத்த வாகனங்களில் ஏற்றி மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மிகவும் பரிதாபமான இந்த நெரிசல் பலி சம்பவத்தில் உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உடனடியாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

“ஹாத்தரஸ் மாவட்டத்தில் நடந்த துரதிர்ஷ்டவசமான விபத்தில் ஏற்பட்ட உயிர் இழப்பு மிகவும் சோகமானது. இதயத்தைத் துன்புறுத்துகிறது. அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், போர்க்கால அடிப்படையில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும், காயமடைந்தவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் லக்ஷமி நாராயண் சவுத்ரி மற்றும் சந்தீப் சிங் ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்குச் செல்லுமாறு முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதேபோல், மாநில தலைமைச் செயலாளர் மற்றும் பொலிஸ் தலைமை இயக்குநரும் அங்கு விரைய உத்தரவிட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே, உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு 2 லட்சம் ரூபா நிவாரணமாக வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்துள்ளது. காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.











# இலங்கை கடற்படையை கண்டித்து பாம்பனில் நாட்டுப் படகு மீனவர்கள் வேலை நிறுத்தம்

இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும் பாம்பனில் நாட்டுப் படகு மீனவர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாம்பன் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலுக்குச் சென்ற இருதயராஜ், ஸ்டீபன், ஜார்ஜ் ஆகியோருக்குச் சொந்தமான மூன்று நாட்டுப்படகுகள், நம்புதாளை கடற்பகுதியிலிருந்து கடலுக்குச் சென்ற ஒரு நாட்டுப்படகு என மொத்தம் நான்கு நாட்டுப் படகுகளை கைப்பற்றிய இலங்கைக் கடற்படையினர், அதிலிருந்த 25 மீனவர்களை கைது செய்தனர். 25 மீனவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர்கள் ஜூலை 15ஆம் திகதி வரை வரையிலும் நீதிமன்ற காவலில் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த திங்கள்கிழமை இரவு பாம்பனில் நாட்டுப் படகு மீனவ தலைவர் எஸ்.பி. ராயப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கை கடற்படையினரை கண்டித்தும், சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்து தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுக்க மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியும் வேலை நிறுத்தப் போராட்டமும், வெள்ளிக்கிழமை காலை பாம்பன் சாலை பாலத்தை முற்றுகையிடும் போராட்டமும், வெள்ளிக்கிழமை மாலை மண்டபம் ரயில் நிலையத்தை முற்றுகைப் போராட்டம் நடத்தவும் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, நேற்று செவ்வாய் கிழமை பாம்பனில் நாட்டுப் படகு மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பாம்பனில் 200 இற்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகள் ஆழமற்ற கடற்பகுதிகளில் நங்கூரமிடப்பட்டிருந்தது. மேலும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





# உக்ரைனின் இரண்டு கிராமங்களை கைப்பற்றியதாக ரஷ்யா அறிவிப்பு

## உக்ரைன் மறுக்கின்றது

உக்ரைனின் கிழக்கு பகுதியிலுள்ள இரண்டு கிராமங்களை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

தலைநகர் கார்கிவ் பகுதியில் உள்ள ஸ்டெபோவா நோவோசெலிவ்கா மற்றும் டொனெட்ஸ்க் பகுதியிலுள்ள நோவோபோக்ரோவ்ஸ்கே ஆகிய இரண்டு கிராமங்களையே தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

எனினும், இதனை திட்டவட்டமாக மறுக்கும் உக்ரைன் இராணுவம், மேற்கூறப்பட்ட பகுதிகளில் ரஷ்ய இராணுவத்தின் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் முதல் உக்ரைன் தலைநகர் கார்கிவ் மீது, ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளது.

ரஷ்யா – உக்ரைன் இடையேயான போர் கடந்த 3 வருடங்களாக நடந்து வரும் நிலையில், இந்த போரில் உக்ரைன் பகுதியிலேயே அதிகளவான உயிரிழப்புக்களும், சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கு நாடுகளின் உதவியுடன், உக்ரைன் இந்த போரில் ஈடுபட்டுள்ளது. ரஷ்யாவுக்கு வட கொரியா, சீனா உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்து வருகின்றன.


இந்த நிலையில், உக்ரைனை கைப்பற்றுவது தங்களின் நோக்கம் இல்லை என தெரிவிக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிர் புடின், மேற்குலக நாடுகளால், உக்ரைன் வழியாக தங்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.





# இம்ரான்கானை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

## பாகிஸ்தானிடம் ஐ.நா. கோரிக்கை



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், முன்னாள் பிரதமருமான இம்ரான் கானை உடனடியாக விடுவிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

பல்வேறு வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டு, கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் சிறையில் வைக்கப்பட்டுள்ள இவரின் தடுப்புக் காவல் தன்னிச்சையானது மற்றும் சர்வதேச சட்டத்தை மீறுவதாக உள்ளது.

எனவே அவரை உடனடியாக விடுதலை செய்து இழப்பீடு வழங்கவேண்டும் என தன்னிச்சையான தடுப்புக் காவல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் குழுவின் இந்தக் கோரிக்கைக்கு பாகிஸ்தானின் அரசு, இது உள்நாட்டு விவகாரம் என பதிலளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத பட்டியலில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு நீக்கப்பட்டது



பயங்கரவாத அமைப்புகளின் பட்டியிலிலிருந்து லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பின் பெயரை அரபு நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக் நீக்கியுள்ளது.

ஹிஸ்புல்லாக்களை பயங்கரவாதிகள் என்று அழைப்பதால் அவர்களுடன் தகவல் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலை உள்ளதாக, அரபு நாடுகளின் கூட்டமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் ஹோஸம் ஸாகி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையைப் போக்குவதற்காக, பயங்கரவாத அமைப்புகள் பட்டியலிலிருந்து ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினரை நீக்க உறுப்பு நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிஸ்புல்லா படையை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருந்ததாகவும், இது தங்கள் தீர்மானங்களிலும் எதிரொலித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எகிப்து, சவூதி அரேபியா, லெபனான், சிரியா உள்ளிட்ட 22 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அரபு லீக், ஈரானால் உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லா படையினரை பயங்கரவாதிகளாக கடந்த 2016 ஆம் ஆண்டு அறிவித்திருந்தது.




# மட்டக்களப்பில் தீர்வு கிடைக்கும் வரையில் வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டம்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வேலையில்லாப் பட்டதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வங்குமாறு கோரி தீர்வு கிடைக்கும் வரை தொடர்போராட்டத்தில் ஈடுபடபோகிறார்கள் எனத் தெரிவித்து நேற்றய் செவ்வாய்கிழமை காந்தி பூங்காவில் தொடர் போரட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குமாறு கோரி தொடர் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதனையடுத்து காந்தி பூங்காவில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஒன்றிணைந்தனர்.

இதன்போது 'பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்து எம்மை ஏமாற்றாதே!', 'கல்விகொடுத்த அரசே! கொள்ளி வைக்கலாமா?, 'நாங்கள் பட்டம் முடித்து வேலையின்றி இறப்பதா?', 'பட்டதாரிகள் வீதியில் நின்றால் நாடு எப்படி உருப்படும்?', 'வேண்டும், வேண்டும், வேலை வேண்டும்' எனப் பல வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு ஆர்பாட்டத்தை ஆரம்பித்து வைத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். தீர்வு கிடைக்கும் வரைக்கு இந்த இடத்தில் போராடப்போகிறார்கள் எனத் தெரிவித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.












# அபிவிருத்தி அலுவலர் தடைதாண்டல் பரீட்சையில் மொழி ரீதியிலான அநீதி

## வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கே.வசந்தன்)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் முதலாவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் தமிழ் மொழி வினாத்தாளில் சிங்கள மொழியில் தரவுகள் வழங்கப் பட்டமையால் பரீட்சார்த்திகள் சிரமங்களை எதிர் கொண் டமையுடன், இது தொடர்பில் வவுனியா மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

1978 ஆம் ஆண்டின் அரசமைப்பின் 13 ஆம் மற்றும் 16 ஆம் திருத்தங்களில் சிங்களம் மற்றும் தமிழ் அரச கரும மற்றும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஆங்கிலத்துக்கு இணைப்பு மொழி என்ற அந்தஸ்த்தும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் வெறுமனே எழுத்து வடிவில் இருக்கும் சட்டங்க ளும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறுபான்மை இனத்தவரை பெரிதும் பாதிக்கிறது. 30.06.2024 அன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டது.

அதில் கணனிப் பரீட்சையில் விரிதாள் தொடர்பான கேள்விக்கான தரவுகள் முழுவதுமாக சிங்கள மொழியிலையே வழங்கப்பட்டதால், பரீட்சையை எதிர்கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி இருந்தனர். பின்பு அதற்கான மொழிபயர்ப்பு செய்யப்பட்ட போதிலும் பரீட்சார்த்திகளின் நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டமை எங்களுக்கான அநீதியாகவே உள்ளது.

இது பெரும்பான்மையாக சிங்கள மொழி பேசுபவர்களுக்கு சாதகமாகவும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு பாதகமாகவும் இருந்ததைச் சுட்டிக்காட்ட விரும்புவதோடு, இவ்வாறான தவறு இனி இடம்பெறாதவண்ணமும் நடைபெற்ற தவறுக்கு மன்னிப்பு கேட்பதோடு அதற்கான நிவாரணம் வழங்க சிலிடா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில், குறிப்பாக சிறுபான்மை மக்களின் மொழி உரிமைகள் பற்றி பொது மக்களின் உணர்திறனும் மதிப்பும் குறைவாகவே உள்ளது. அந்த வகையில், அனைத்து அரச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் அரச கரும மொழிக் கொள்கையை வினைத்திறனுடன் அமுல்படுத்தி மொழி ரீதியான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். - எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Development Officers,
Vavuniya District,
01-Jul-2024

Human Rights Commission of Sri Lanka
No 14, R. A. De Mel Mawatha,
Colombo 4

Dear Sir/Madam,

**COMPLAINT REGARDING LANGUAGE DISCRIMINATION IN THE FIRST EFFICIENCY BAR EXAMINATION**

We are writing to express our grave concern regarding an incident of language discrimination that occurred during the **First Efficiency Bar Examination** conducted on **30.06.2024** for Development Officers. This incident highlights ongoing issues in the implementation of language equality as stipulated by the 13th and 16th Amendments to the Constitution of 1978, which adopted Sinhala and Tamil as the official and national languages and designated English as an associate language.

During the examination, the data for a question related to spreadsheets (Excel) was provided entirely in Sinhala. This created considerable difficulty for development officers who are Tamil speakers. Although a translation was eventually provided, the time lost waiting for this translation caused undue stress and disadvantage to these candidates, rendering the examination process inherently unfair.

This situation clearly favored the majority of Sinhalese-speaking candidates and was disadvantageous to Tamil-speaking officials. Such discrepancies undermine the language rights of minorities and reflect a broader systemic issue in the fair treatment of linguistic minorities in public service examinations and other official processes.

Additionally, this incident is indicative of a wider pattern of neglect and inadequate implementation of language policies intended to protect minority rights. Instances such as these erode trust in public institutions and highlight the need for rigorous enforcement of language equality provisions.

We request the Human Rights Commission to:

1. Investigate this incident thoroughly to identify lapses and hold responsible parties accountable.
2. Recommend that SLIDA issue a formal apology to the affected candidates.
3. Ensure that examination materials are provided simultaneously in both Sinhala and Tamil to prevent any future occurrences of such disadvantages.
4. Mandate training for officials involved in the preparation and administration of examinations to foster a greater understanding of and compliance with bilingual policies.
5. Promote public awareness and appreciation of the language rights of minorities through educational campaigns and workshops.

The effective implementation of the government's bilingual policy is essential to ensure the linguistic rights of Tamil people are respected and upheld. We believe that all government institutions, universities, civil organizations, and other entities must take proactive measures to address these disparities and foster an inclusive environment for all citizens.

We urge the Human Rights Commission to take immediate and decisive action to address this issue and prevent similar occurrences in the future.

Thank you for your attention to this matter. We look forward to your prompt and just resolution of this issue.

Copy: Sri Lanka Institute of Development Administration (SLIDA)
District Secretary, District Secretariat Vavuniya
Divisional Secretary, Divisional Secretariat Vavuniya

# நுவரெலியாவில் கொரியா நாட்டு யுவதியிடம் சேட்டை விட்ட இயந்திரப் படகு சாரதி கைது

## அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

(ஆ.ரமேஸ்)

கொரியா நாட்டிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா பயணத்தை மேற்கொண்டு நுவரெலியாவுக்கு வருகை தந்த இளம் யுவதியிடம் தகாத வகையில் சேட்டை செய்த இயந்திர படகு ஓட்டுனர் ஒருவரை விளக்கமறியலில் வைக்க நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப் பித்துள்ளது.

இந்த உத்தரவை நுவரெலியா நீதிவான் பிரபுதிகா நாணயக்கார நேற்று முன்தினம் மாலை பிறப்பித்துள்ளார்.

நுவரெலியாவுக்குச் சுற்றுலாப் பயணியாக வருகை தந்திருந்த கொரியா நாட்டு இளம் யுவதி கிறேகறி தெப்பக்குள பகுதிக்கு மாலை அழகை ரசிக்கச் சென்று அங்கு குளத்தில் இயந்திர படகில் சவாரி செய்ய முற்பட்டுள்ளார்.

இந்த சமயத்தில் களத்தில் குளத்தில் படகு சேவையில் ஈடுபட்டிருந்த இளைஞர் அந்த யுவதியிடம் சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதையடுத்து இந்த யுவதி நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தனக்கு நேர்ந்ததை முறையிட்



டுள்ளார். அதேநேரம் யுவதியின் முறைப்பாட்டை ஏற்ற சுற்றுலாத்துறையை பொறுப்பான பொலிஸ் பிரிவினர் கிறேகறி குளத்திற்குச் சென்று சேட்டையில் ஈடுபட்ட இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரை விசாரணைகளின் பின் நேற்று முன்தினம் மாலை நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்திய போது சந்தேக நபரை எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.




# லிட்ரோ சமையல் எரிவாயு விலை குறைக்கப்படுகிறது

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 100 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் நிறையு டைய லிட்ரோ சமையல் எரிவாயு 3,690 ரூபாக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதேநேரம், 5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன் விலை 40 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 5 கிலோகிராம் நிறையு டைய லிட்ரோ சமையல் எரிவாயு 1,482 ரூபாக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், 2.3 கிலோ கிராம் நிறை யுடைய லிட்ரோ சமையல் எரிவாயு விலை 18 ரூபாவால் குறைக்கப்பட் டுள்ளது. இதற்கமைய, 2.3 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 694 ரூபாக்கு விற்பனை செய்யப்படுகிறது.




# லாப்ஸ் சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை

லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் எவ்வித மாற்றமும் மேற் கொள்ளப்படமாட்டாது என அறிவிக் கப்பட்டுள்ளது.

லாப்ஸ் நிறுவனம் இதனைத் தெரி வித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு 3,680 ரூபாவிற்கும், 5 கிலோ கிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு 1,477 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

# இந்த ஜனாதிபதியின் கீழ் தேசிய அரசை அமைக்க ஆதரவளிக்கப் போவதில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

தற்போதைய ஜனாதிபதியின் கீழ் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பு வழங்காதிருக்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண முன்வைத்த இந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

# புதிய வகை பெட்ரோல் இலங்கையில் அறிமுகம்



லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் ஒக்டேன் 100 ரக பெட்ரோலை சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் தலைவர்கள் குழுவொன்று அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# தயாசிறியை பதவியிலிருந்து நீக்குவதை இடைநிறுத்தி இடைக்கால தடையுத்தரவு

தயாசிறி ஜயசேகரவை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை நிறைவுபெறும் வரை இந்த இடைக்கால தடையுத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தயாசிறி ஜயசேகர நேற்று முதல் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.





# ஜப்பானின் அமைச்சரவைச் செயலாளருடன் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு

ஜப்பானுக்கு சென்றுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அந்த நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய அமைச்சரவை தலைமைச் செயலாளருமான ஹயாஷி யோஷிமாசாவை டோக்கியோவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் முன்னேற்றம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜப்பான் நீதியமைச்சர் ரியூஜி கொய்சுமியையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

# கெஹெலியவின் மனு மீது ஓகஸ்ட் 1 இல் மன்று முடிவு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மனுவைப் பரிசீலிப்பது தொடர்பான தீர்மானம், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

தரமற்ற தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கு விசாரணை முடியும் வரை முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மேற்படி உத்தரவை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடக் கோரி அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

# மழைநீர் சேமிக்கும் 934 தாங்கிகளை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி


யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மழைநீரை சேமிப்பதற்காக 934 தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மழைநீரை சேமிக்கக்கூடிய 3 ஆயிரம் தாங்கிகளை நிர்மாணிக்க இந்திய அரசாங்கத்துடன் 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தமொன்று கைச்சாத்தானது.

இந்தத் திட்டத்தினை 3 வருடங்களில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிதி மற்றும் தொழில்நுட்ப பிரச்சினைகளால் இந்த வருடம் ஜூன் மாதம் வரை அதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

இந்தநிலையில்,

அவ்வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள நிதியில் 934 கிணறுகளை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.



# கடன் மறுசீரமைப்பு விடயங்கள் குறித்து சிலர் உண்மைக்குப் புறம்பான பிரசாரம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் உரை

“நாடாளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் பல்வேறு நபர்கள் கடன் மறுசீரமைப்பு மற்றும் அது தொடர்பான விடயங்கள் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டிற்கு சரியான கொள்கையுடன் அரசாங்கம் முன்னோக்கிச் செல்லும் போது விமர்சனம் செய்வோர் அதிகாரத்திற்காக நாளாந்தம் வெவ்வேறு கதைகளை உருவாக்கி வருகின்றனர்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். அந்த உரையின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில் –

“பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான சவாலான பயணம் தொடங்கிய நாள் முதல், நான் அவ்வப்போது நாடாளுமன்றத்தில் அது தொடர்பிலான விடயங்களை முன்வைத்தேன். முதலில் நாங்கள் பின்பற்றி வரும் திட்டங்களை நாடாளுமன்றத்தில் விளக்கினோம். அதன் பிறகு நாங்கள் செய்த முன்னேற்றம் குறித்து விளக்கினோம்.

2022 ஆம் ஆண்டு கடன் செலுத்த முடியாத நாட்டிற்கு, மீண்டும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சவாலான பயணத்தில் இன்னுமொரு முக்கியமான மைல்கல்லை எட்டுவதற்கு எம்மால் முடிந்தது.

கடந்த ஜூன் 26ஆம் திகதி எது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் மீண்டும் கடனைச் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதற்கு முடிந்தது.

அமைச்சரவையினால் அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள், எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த இணக்கப்பாடுகளிலும், ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டனர். அன்றிரவு இலத்திரனியல் ஊடகங்களின் ஊடாக நாட்டு மக்களுக்கு இதுகுறித்து அறிவித்தேன்.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் சவால் மிக்க பயணத்தின் ஆரம்ப நாள் முதல் நான் இதுகுறித்து அவ்வப்போது நாடாளுமன்றத்தில் தகவல்களை முன்வைத்தேன். முதலில் நாம் பின்பற்றும் திட்டங்கள் குறித்து நாடாளுமன்றத்தைத் தெளிவுபடுத்தினோம். அதன்பின்னர் நாம் பெற்றுக் கொண்ட முன்னேற்றங்கள் குறித்து தகவல்களை முன்வைத்தோம்.

இதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக் கொண்ட பின்னர், எமது நான்கு அம்சக் கொள்கைகளை நான் பாராளுமன்றத்தில் முன்வைத்தேன்.

1. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து, விரிவான கடன் வசதிகளைப் பெற்று நாட்டில் நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்துவது,

2. சர்வதேச நிதி மற்றும் சட்ட வல்லுனர்களான லாஸார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து கடன் உறுதிப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து கடன் வழங்குநர்களுடன் உடன்பாட்டை எட்டுவது,

3. வெளிநாட்டு முதலீட்டை உறுதிப்படுத்திக் கொள்வதோடு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் கொள்கைகள், சட்ட திட்டங்களை உருவாக்குவதுடன், டிஜிட்டல் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவது,

4. இத்திட்டத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டுக்குள் கடனற்ற பொருளாதாரத்தை உருவாக்கி அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவது,

அதிலிருந்து நாம் கடினமான, கஷ்டமான பயணத்தை ஆரம்பித்தோம். அந்தப் பயணமே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை நாம் அறிந்திருந்தோம். படிப்படியாக நாம் முன்னேறிச் சென்றோம். 2023 – 2024 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அந்த வேலைத் திட்டத்தை மேலும் வலுப்படுத்தினோம்.

2023 மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான இணக்கப்பாடுகளை எட்டினோம். அதன் முதல் தவணையை 2023ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி பெற்றுக் கொண்டோம். நாம் அடைந்திருந்த முன்னேற்றத்தை மீளாய்வு செய்த பின்னர், இரண்டாம் தவணையை 2023ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதியும், மூன்றாம் தவணையை 2024 ஜூன் 12ஆம் திகதியும் பெற்றுக் கொண்டோம்.

சர்வதேச நாணய நிதிய வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், கடன் மறுசீரமைப்பிற்கான பேச்சுவார்த்தைகளை நாம் ஆரம்பித்தோம். இந்தப்

தொடர்ச்சி▼

# கடன் மறுசீரமைப்பு விடயங்கள் குறித்து சிலர் உண்மைக்குப் புறம்பான பிரசாரம்

தொடர்ச்சி▲

பணிகளுக்குத் தேவையான நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக லஸார்ட் (Lazard) மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் (Clifford Chance) சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பை தொடர்ந்து பெற்றோம்.

எமது வெளிநாட்டு கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் 10.6 பில்லியன் டொலர் இரு தரப்பு கடன்,11.7 பில்லியன் டொலர்கள் பல் தரப்பு கடன்,14.7 பில்லியன் டொலர் வணிகக் கடன்,12.5 பில்லியன் டொலர் கடன் பிணை முறிகள் மூலம் பெறப்பட்டவை. கடனை வெட்டிவிடுதல், கடன் சலுகை காலம், கடனை மீளச் செலுத்தும் கால அவகாசத்தை நீடித்தல் உள்ளடங்களான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலும், வெளியிலும் பல தரப்பினர், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவற்றில் சில விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. சில விடயங்களில் பாதி உண்மையே இருந்தது. அதனால் கடன் மறுசீரமைப்பு குறித்த விடயங்களில் சர்வதேச நடைமுறைகளையும், உண்மைகளையும் நான் இந்தத் தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கடன்கள் என்றால் என்ன? வெளிநாடுகள் கடன்களை வழங்க எங்கிருந்து பணத்தைப் பெறப்படுகின்றன? அந்தந்த நாட்டு மக்களின் வரிப் பணத்தையும், சேமிப்புக் களையுமே எமது கடனாக வழங்குகின்றனர். ஆனால் எமது நாட்டில் எந்தவொரு அர்ப்பணிப்பையும் செய்யாமல் கடன் சலுகைகளைப் பெற வேண்டும் என்று யோசனை முன்வைக்கின்றனர். அவ்வாறு நடக்காது. இது நடைமுறைச் சாத்தியமற்றது. சர்வதேச நடைமுறைகளுக்கமைய அவ்வாறு செய்ய முடியாது. மக்களின் வரிப் பணத்தைப் போலவே, அவர்களின் சேமிப்புக்கள் குறித்து தீர்மானங்களை எடுக்கும்போது, எங்களுக்கும் சில அர்ப்பணிப்புக்களைச் செய்ய நேரிடும். நாம் இதற்காக அர்ப்பணிப்புச் செய்யாவிட்டால், அந்நாட்டு மக்கள் எங்களுக்காக அர்ப்பணிப்புச் செய்ய முன்வர மாட்டார்கள்.

எமது நாட்டில் கடன் ஸ்திரத் தன்மை இல்லை என்று சர்வதேச நாணய நிதியம் 2022 ஆம் ஆண்டு நாம் கஷ்டத்தில் விழுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே எங்களுக்கு அறிவித்திருந்தது. அதேபோல் சர்வதேச நாணய நிதியம் பின்பற்றும் நடைமுறை நாட்டிற்கு நாடு வேறுபடுகிறது. குறைந்த வரு மானம் பெறும் நாடுகள் தொடர்பில் ஒரு நடைமுறையைப் பின்பற்றுகின்றனர். நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தொடர்பில் வேறொரு நடைமுறை பின்பற்றப்படுகிறது. இதுகுறித்து ஒரு உதாரணத்தை முன்வைக்கிறேன். இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலில் வருகிறது. நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்காக அறிமுகப்படுத்தியுள்ள புதிய கடன் ஸ்திரத்தன்மை விசேட வரையறைகளைப் பயன்படுத்தி கடன் மறுசீரமைப்புக்களை மேற்கொண்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இலங்கைக்காக அவர்கள் முன்வைத்த செயல்திட்டத்திற்கமைய 2032 ஆண்டு அரச கடன் தொகை, மொத்த தேசிய உற்பத்தியில் 95 வீதத்தையும்விட குறைத்திட வேண்டும். குறைந்த வருமானம் பெறும் நாடான கானாவிற்கு இதற்கு மாறான வேலைத் திட்டத்தையே முன்வைத்திருந்தனர்.

இந்த வேலைத் திட்டத்திற்கமைய 2028ஆம் ஆண்டில் அவர்களின் அரச கடனானது மொத்த தேசிய உற்பத்தியில் 55 வீதத்தைவிட குறைவானதாக இருக்க வேண்டும். கானாவும் இலங்கையைப் போன்று இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. அந்நாட்டு ஜனாதிபதியும் நானும் இதுகுறித்து அடிக்கடி பேசிவந்துள்ளோம். ஆனால் கானா என்பது குறைந்த வருமானம் பெறும் நாடாகும். எனினும், எமது இரு நாடுகளுக்கும் பொதுவான சில விடயங்களும் இருந்தன. சில விடயங்கள் மாறுபட்டிருந்தன. ஆனால் இரு நாடுகளுக்கும் இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளது.

இந்தப் பின்னணியில், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் பரிஸ் கழகம், இந்தியா மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டியிருந்தது. எனினும், இதில் எந்தவொரு தரப்பினருக்கும் சிறப்பிடம் கொடுப்பதற்கு எமக்கு அனுமதியிருக்கவில்லை. இந்த இரு தரப்பினரையும் சமமாக நடத்தும் பொது நிபந்தனைகளை தயாரிப்பதே எமக்கிருந்து பாரிய சவாலாகும்.

தற்போது நாம் எதிர்கொண்டுள்ள பூகோளஅரசியல் முன்னேற்றங்களுக்கு மத்தியிலேயே நாம் இந்த இந்த சிக்கலான சவாலை சந்தித்தோம். இதனால் எமது இலக்குகளை நோக்கிப் பயணிப்பது இலகுவானதாக அமையவில்லை. பொம்மலாட்டத்தையும் முகக் கவச நடனத்தையும் ஒன்றாக ஆடுவதைப் போல இது மிகவும் சிக்கலான பணியாக இருந்தது. இது செய்ய முடியாத பணியாகும். இருந்தாலும் நாம் செய்து முடித்தோம். எனினும், இந்த அனைத்து கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் சர்வதேச நாணய நிதிய வேலைத் திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் வெளிநாட்டு இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்தது.

இந்த குறுகிய காலத்திற்குள் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்த நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் பட்டியலில் நாம் முன்னணி வகிக்கிறோம். இது மிகப் பெரிய வெற்றியாகும். இது நற்செய்தியாகும்.

இந்தியா, ஜப்பான், பிரான்ஸ், இணைத் தலைமைத்துவம் வகிக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு மற்றும் சீன எக்ஸிம் வங்கி ஆகிய தரப்புக்களுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் குறித்து நான் நாடாளுமன்றத்தை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அடிப்படை கடனை மீளச் செலுத்துவதற்காக 2028 ஆம் ஆண்டு வரை கால அவகாசம் எங்களுக்கு கிடைத்துள்ளது. வட்டி வீதம் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய வட்டிவீதம் 2.1 அல்லது அதற்கு குறைந்தளவில் தக்கவைத்துக் கொள்ள அனுமதி கிடைக்கும்.

கடனை முழுமையாக செலுத்தி முடிக்க 8 வருட கால அவகாசம் கிடைத்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதாயின், 2043 ஆம் ஆண்டு வரை அவகாசம் கிடைத்துள்ளது.

கடன் சேவை காலத்தை நீடித்துக் கொள்வதுடன் அடிப்படைக் கடனை மீளச் செலுத்தும் தொகையை தொடர்ந்து அதிகரிக்க முடியும். இதன்பலனாக வட்டியாக செலுத்த வேண்டிய 5 பில்லியன் டொலர்களை சேமித்துக் கொள்ள முடியும்.

எனவே, பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அந்நியச் செலாவணியை அதிகரித்து கொள்ள வேண்டும். அரச அடிப்படை நிதி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் கடனை மீளச் செலுத்தும் இயலுமையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். இவற்றின் ஊடாக எதிர்காலத்தில் வலுவான நிலையில் இருந்து கடன் செலுத்துவதற்கான வாய்ப்பு கிட்டும்.

2023 ஆம் ஆண்டு எமது உள்நாட்டு கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தோம். இதன்போது நாம் மிகவும் கவனமாக செயல்பட்டோம். எமது நாட்டின் நிதி நிறுவனங்கள் பலனவீனமடையாத வகையிலும், அந்தந்த நிறுவனங்களுக்கு, நெருக்கடி ஏற்படாத வகையிலும், வைப்பாளர்கள் நெருக்கடிகளைச் சந்திக்காத வகையிலும் உள்நாட்டு மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுத்தோம்.

தற்போது நாம் 10 பில்லியன் டொலர் உள்நாட்டு இரு தரப்புக் கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளோம்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான

தொடர்ச்சி▼

# கடன் மறுசீரமைப்பு விடயங்கள் குறித்து சிலர் உண்மைக்குப் புறம்பான பிரசாரம்

தொடர்ச்சி▲

சர்வதேச பிரகடனங்களுக்கமைய பல்தரப்பு கடன்கள் இந்த வேலைத் திட்டத்திற்குள் உள்ளடங்காது. உண்மையில் பல்தரப்பு கடன்களை எந்த இடத்திலும் குறைத்துக் கொள்ள முடியாது. இவை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட கடன்களாகும்.

அடுத்தகட்டமாக 14.7 பில்லியன் அமெரிக்க டொலர் வணிகக் கடன்களை மறுசீரமைக்க வேண்டியுள்ளது. அதற்கான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில நாள்களில் அந்தப் பணிகளை நிறைவுசெய்ய முடியும் என எதிர்பார்க்கிறோம். அதன்பின்னர் எமது கடன் மறுசீரமைப்பு தொடர்பான அனைத்து ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்கள் நாடாளுமன்ற அரச நிதி செயற்குழுவில் சமர்ப்பிக்கப்படும்.

முன்னதாக இரண்டு ஒப்பந்தங்களை மட்டும் நிதி செயற்குழுவில் சமர்ப்பிக்க எதிர்பார்திருந்தோம். ஆனால், தற்போது தனியார் பிணை முறி கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. ஆனால், பிரான்ஸில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தேர்தல் ஒன்று நடப்பதால் இதனை சில நாள்களுக்குப் பிற்போடுமாறு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கோரியுள்ளனர். இதற்கு நான் இணக்கம் தெரிவித்துள்ளேன். எனினும், இதனால் எமக்கு பாதிப்பு ஏற்படாது. கானாவும், இலங்கையும் இவற்றில் கையெழுத்திட்டுள்ளன. இதுபற்றிய தெளிவுபடுத்தல்களுக்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்க வேண்டும். அதே போல் பிரான்ஸின் புதிய அரசாங்கத்துடன் பேச வேண்டிய இன்னும் பல விடயங்கள் இருக்கக் கூடும்.

பின்னர் இதுகுறித்து ஆழமாகவும், விரிவாகவும் ஆராயுமாறு நிதி தொடர்பான குழுவிடம் கேட்டுக் கொள்கிறேன்.

நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுடன் இது குறித்து பேசியிருக்கிறேன். இந்த தகவல்கள் அனைத்தையும் சேர்த்துக் கொண்டு இதுகுறித்து ஆழமான, விரிவாக ஆராயுமாறு கேட்டுக்கொள்கிறேன். இது எமது எதிர்காலம் தொடர்பானது. எனவே அனைவரும் இதுகுறித்து ஆராய வேண்டும்.

இது வரையில் நாம் சரியான பாதையில் பயணித்தமையால் குறுகிய காலத்தில் இவ்வாறான முன்னேற்றத்தை அடைய முடிந்தது. தற்போது நாம் அடைந்துள்ள சாத்தியமான பெறுபேறுகளினால் நாட்டிற்கு கிடைக்கும் பலன்கள் குறித்தும் நாடாளுமன்றத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கடன் செலுத்தும் இயலுமை இல்லை என 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு வெளிநாடும் எமக்கு கடன் வழங்க முன்வரவில்லை. அவ்வாறான பின்னணியில் அவர்களால் சட்டபூர்வமாக கடன் வழங்கவும் முடியாது. இந்தக் காலப் பகுதியில் நட்பு நாடுகள் என்ற வகையில், இந்தியாவும், பங்களாதேசும் குறுகிய கால கடன் உதவிகளை வழங்கின.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் பல வழிகளில் சலுகைக் கடன்களைப் பெற்றுத் தந்தன. அதுதவிர வேறெந்த நாட்டிற்கும் நீண்ட கால கடன்களை வழங்க முடியாத நிலை இருந்தது. சில அரசியல் குழுக்கள் எமது வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் போலிச் செய்திகளைப் பரப்பி வருகின்றன."– என்றார்.

# ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு அனுமதி

ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது.

ஓய்வூதியம் பெறாத தனியார் மற்றும் பகுதி அரச ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக ஊழியர் சேமலாப நிதியம் நிறுவப்பட்டுள்ளது.

இதன்படி ஊழியர் சேமலாப நிதியத்துக்கு உள்வாங்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களுக்குத் தரமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில் இந்தச் சட்டம் திருத்தப் படவுள்ளது.

இதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக, சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காகத் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# அரச உத்தியோகத்தர்களை கடைக்குள் வைத்துப் பூட்டி அச்சுறுத்திய மருந்தக உரிமையாளர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணத்தில் மருந்தகமொன்றைச் சோதனையிடச் சென்ற அரச உத்தியோகத்தர்கள் இருவரை மருந்தகத்திற்குள் பூட்டி வைத்த கடை உரிமையாளரை எதிர்வரும் 05ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் உள்ள மருந்தகமொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுகாதார அமைச்சகத்தின் உணவுக் கட்டுப்பாடு நிர்வாக பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர் மருந்தகத்தின் அனுமதி தொடர்பாக சோதனையிடச் சென்றனர்.

சோதனையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கும் போது அதிகாரிகளை கடை உரிமையாளர் மருந்தகத்திற்குள் வைத்துப் பூட்டி அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், மருந்தகத்தினுள் வைத்து பூட்டப்பட்டிருந்த அரச உத்தியோகஸ்தர்களை மீட்டமையுடன், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரைக் கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை மருந்தக உரிமையாளரை எதிர்வரும் 05ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது .



# அஸ்வெசும, உறுமய போன்ற திட்டங்களுடன் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் திட்டம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தகவல்

"போஷாக்கு குறைப்பாடு, வறுமை, வேலையின்மை உள்ளிட்ட பிரச்சினைகளை நிவர்த்திக்கவே இளைஞர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான தொழிற்சாலைகள் மற்றும் அஸ்வெசும, உறுமய போன்ற திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

போஷாக்கு குறைபாடு, வறுமை, வேலையின்மை என்பன நாட்டுக்கு நற்செய்தியா? துயர் செய்தியா? என்று நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்து மக்கள் சிரமப்படும் வேளையில், பிரதமர் பதவியை ஏற்காமல், பயந்து ஓடுவது நற்செய்தியா? துயர் செய்தியா? என்று பதில் கேள்வி கேட்ட ஜனாதிபதி, மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

"போஷாக்குக் குறைபாட்டினால் பிள்ளைகள் பாதிக்கப்படுவது நல்லதா, கெட்டதா என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

இது கெட்டதாகும். அதனால்தான், அஸ்வெசும திட்டத்தை செயல்படுத்தினோம். குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கு பத்து கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. எனவேதான் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வறுமை நல்லதா கெட்டதா என்று கேட்கிறார்கள். வறுமை கெட்டது!

அதனால்தான் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இரண்டரை லட்சம் பேருக்கு அந்த வீடுகளின் உரிமை வழங்கப்படுகிறது. வேறு என்ன வழங்க வேண்டும்? வேலையின்மை நல்லதா கெட்டதா என்றும் கேள்வி எழுப்பினார்.

வேலையின்மை நல்லதல்ல என்பதாலேயே புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கிறோம். புதிய முதலீடுகளையும் கொண்டு வருகிறோம். அதேபோல் நான் இன்னும் ஒரு விடயத்தை கேட்க விரும்புகிறேன்.

நாட்டின் பொருளாதாரம் சரிந்து மக்கள் சிரமப்படும் போது, பிரதமர் பதவியை ஏற்காமல் பயந்து ஓடுவது நல்லதா? கெட்டதா?

கட்டுமான ஒப்பந்ததாரர்களுக்கு ஏற்கனவே 200 பில்லியன் ரூபாய் நிலுவைத் தொகை செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தி உங்களுக்கு வருத்தம் அளிக்கிறதா? மீண்டும் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் போது கண்டி அதிவேகப் நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வோம். அது வருத்தமளிக்கும் செய்தியா? அது தொடர்பான அறிக்கைகளை கபீர் ஹஸீம், ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

இப்போது தனியார் பிணை முறி வழங்குனர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது. Clifford Chance நிறுவனம் இது பற்றிய தகவல்களை இப்போதைக்கு வெளியிட வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து ஏனைய தரப்புக்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் தெரியவரும் என்பதாலேயே அவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனால் மூன்று ஒப்பந்தங்களையும் ஒரே நேரத்தில் சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையைப் போன்றே கானாவும் இவ்வாறான ஒப்பந்தங்களில் கைசாத்திட்டுள்ளது. ஆனாலும் கானா அந்த விடயங்களை இன்று வரையில் வெளியிடவில்லை.

குறிப்பாக, இந்த விடயங்கள் அனைத்தும் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரச நிதி தொடர்பான செயற்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன. குழுவில் இருப்போர் அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பர். ஹர்ஷ டி சில்வாவைக் கண்டு உங்களுக்கு பொறாமை ஏற்படுகிறதா? அதனை செய்வதை நீங்கள் விரும்பவில்லையா? இப்போது இவ்வாறு பேசுவதன் அர்த்தம் என்ன? ஹர்ஷ டி சில்வாவின் குழு இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தக் குழு எந்த மாதிரியான அறிக்கையைத் தயாரிக்கும் என்பது எமக்குத் தெரியாது. அந்த அறிக்கை சாதகமாக வருமா, எதிராகத் தயாரிக்கப்படுமா என்பதும் எமக்குத் தெரியாது. இப்போது விவாதிப்பதை விடுத்து அறிக்கையின் படி செயல்படுவோம். கலாநிதி ஹர்ஷ டி சில்வா பற்றி கேள்வி எழுந்தால் அது குறித்த விவாதமொன்று தேவைப்படுமா? இல்லாவிட்டால், நாலக கொடஹேவாவை எதிர்க்கட்சியின் ஆலோசகராக நியமித்து ஒரு தடவை வீழ்ந்த குழியில் மறுமுறை விழ முயற்சிக்கிறார்களா என்ற கேள்விக்குறியும் உள்ளது." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.07.2024




இன்று உங்கள் செயல்களில் தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையிலும் திட்டங்களிலும் பொறுமை தேவை. இறை வழிபாட்டின் மூலம் மன அமைதி பெறலாம்.

உங்கள பணிகளை திறமையாக மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பொறுமையுடன் இருந்து உங்கள் துணையின் அன்பைப் பெறுங்கள். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்கவும் அது உறவை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.




இன்று உங்கள் பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். நம்பிக்கையுடன் இருங்கள். கண்டிப்பாக நல்லதே நடக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பணியாற்ற வேண்டும். இதன் மூலம் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்ற இயலும்.

சில பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கப் பெறலாம்.

உங்கள் நேர்மையான அனுகுமுறை மற்றும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அதனால் சுதந்திரமான நிதிநிலை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள்.




இன்று அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் செயல்களில் வெற்றி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல் திறனில் வெற்றி பெறுவீர்கள். பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.இன்று கடின உழைப்பு வெற்றியை பெற்றுத் தரும். ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை பெற்றுத் தரும்.




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். நல்ல பலன் காண நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் கடினமாக உழைத்த போதிலும் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணியிடச் சூழல் கடினமானதாக இருக்கும்.

உங்களின் மாறுபடும் மனநிலை காரணமாக எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியாக இருக்க உணர்ச்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

இன்று கணிசமான தொகை சம்பாதிப்பதற்கு குறைந்த வாய்ப்பே உள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நற்பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று அதிகம் எதிர்பார்க்க வேண்டாம். பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் பதற்றம் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இத்தகைய மனநிலையை தவிர்ப்பது நல்லது. அமைதியை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் விலை மதிப்பு மிக்க பொருள்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவும். அவற்றை இழக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கக் காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்திறன் கண்டு சகபணியாளர்கள் பொறாமைப்படுவார்கள். உங்கள் செயல்திறனை மேம்படுத்த புதிய யுக்திகளை கையாள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் துணையிடம் சமநிலையோடு பழகுவீர்கள். உங்கள் பிரியமானவரும் உங்களுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வார். இன்று பண வரவு சிறப்பாக இருக்கும் உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.




இன்றைய நாள் சிறிது ஏமாற்றத்துடன் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடைகள் காணப்படும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு நேரத்துடன் பணிசெய்வதன் மூலம் தவறுகளை தவிர்க்க முடியும்.

திருமணம் பற்றிய எண்ணம் இருந்தால் அதனை தள்ளிப் போடவும்.உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.

இன்று பணப்புழக்கம் மிதமாகக் காணப்படும். பணத்தை தக்க வைத்துக்கொள்வது கடினமாக இருக்கும்.

உங்கள் வாழ்க்கைத் துணையின் உடல் நலத்திற்காக செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். அதனால் உங்களுக்கு கவலையாக இருக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.07.2024




இன்று உங்களுக்கு அதிக பொறுமை தேவை. நல்ல வாய்ப்புகள் தவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உறுதியான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக் காது. பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள நீங்கள் இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத்தின் போது இழப்பு ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும். எனவே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். வெற்றி காண்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். பதற்றப்படாமல் செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது தவறுகள் ஏற்படலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்ள முயலுங்கள். இல்லையெனில் தேவையற்ற குழப்பம் சூழ்நிலையை பாதிக்கும்.

இன்று அதிக பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. என்றாலும் சிறிய அளவில் கண்கள் மற்றும் பற்களில் பிரச்சினை ஏற்படலாம்.




இன்று உங்கள் அனைத்து முயற்சிக ளிலும் வெற்றி கிடைக்கும். தன்னம் பிக்கையுடன் வாழ்வில் முன்னேறுவீர்கள். வெற்றி பெறுவதற்கான ஆற்றல் மற்றும் உறுதி உங்களிடம் காணப்படும்.

நீங்கள் பணியிடத்தில் துடிப்புடன் செயல்படுவீர்கள். உங்கள் திறமையின் மூலம் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்சிகரமான உறவை அனுபவிப்பீர்கள். இருவரிடையே உறவில் நல்ல பிணைப்புக் காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அதிக ஆற்றலுடன் காணப் படுவீர்கள். இன்றைய நாளை ஆக்க பூர்வமான நோக்கத்துக்குப் பயன்படுத்து வதன் மூலம் பலன்கள் சாதகமாக இருக்கும். இன்று சௌகரியங்கள் அதிகரித்துக் காணப்படும்.

நீங்கள் திறமையுடன் பணியாற்றி வெற்றி பெறுவீர்கள். உங்கள் தனித்திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மிகவும் மகிழ்விக்கும். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள்.

சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.





